பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 17 செவ்வாய்க்கிழமை (30 05 2000) VALAMPURI ஒலி 162

★ யுத்தம் தீவிரமடைந்து வரும் வேளையில் ✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

# அமெரிக்க அமைச்சரின் வருகை

# சமாதானத் தீர்வை ஏற்படுத்துமா?

## அரசியல் வட்டாரங்களில் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்திற்கும விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்தம் தீவிரமடைந்து வரும் இவ் வேளையில் அமெரிக்க இராஜாங்க இணையமைச்சர் தோமஸ் பிக்கட்றின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்க்கட்சித் தலைவர்கள் ஆகியோருடன் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சு வார்த்தைகளின் போது யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் அரசின் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு அமெரிக்க அரசியல் விவகார இராஜாங்க இணை அமைச்சர் நேற்றுக் காலை 2 மணிக்கு பாகிஸ்தானில் இருந்து இலங்கை வந்துசேர்ந்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இவர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்த பின் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சித் தலைவர்களுடன் அமெ. இராஜாங்க அமைச்சர் பேச்சு

(கொழும்பு)

கொழும்பு வந்துசேர்ந்த அமெரிக்க இராஜாங்கஇணை அமைச்சர் தோமஸ் பிக்கட்றின் தமிழ்கட்சித்தலைவர்களையும், சமாதான அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் நேற்றுச் சந்தித்து இலங்கையின் இன்றைய நிலைவரம் பற்றிஉரையாடி உள்ளார்,

இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் இல்லத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் பேச்சின் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் இனப்பிரச்சினைக்கு இந்தியா எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்றும் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ✱ இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் அரசியல் தீர்வே சாத்தியமானது

### அமெ. இராஜாங்க இணை அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையின் இறைமை. ஒற்றுமை ஒருமைப்பாடு, ஆகியவற்றினை அடிப்படையாக வைத்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் சமரசப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க இணையமைச்சர் தோமஸ் பிக்கட்றின் இவ்வாறு கூறியுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப்பிரச்சினை தொடர்பாக மத்திய அரசின் முடிவை ஆதரிக்கிறேன்

### ஐ. கே. குஜ்ரால் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு எடுத்துள்ள முடிவினை ஆதரிப்பதாக முன்னாள் இந்தியப்பிரதமர் ஐ.கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய பின் இந்திய பிரஸ் டிரஸ்ட் செய்தித் தாபனத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் காயமடைந்தோர் விபரம்

தென்மராட்சிப் பகுதியின் பல பகுதிகளிலும் இடம் பெறும் ஷெல் தாக்குதல்களில் காயமடைந்த மேலும் சிலரின் விபரம் வருமாறு

சந்திரமலர் (வயது 61),

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து நண்பகல 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிககு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## இன்று செயலகத்தில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை குறித்து ஆராய்வதற்கு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரது காலை 10 மணிக்கு யாழ் செயலகத்தில், நடைபெற

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிளைமோர் தாக்குதலில் சார்ஜன்ட் பலி; ஐவர் காயம்!

வவுனியா நெலுக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் கிளைமோர்த் தாக்குதலில் அதிரடிப்படை சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை காலை விசேட அதிரடிப் படையினர் சென்ற ஜீப் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (வ-ச)

## ஷெல் பீரங்கிகளினால் நேற்று யாழ்.நகர் அதிர்ந்தது

யாழ். நகரில் நேற்று முழு நாளும் இடம்பெற்ற 'ஷெல்' பீரங்கித் தாக்குதல்களினால் யாழ். நகர் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

இந்த அதிர்வுகளினால் யாழ். நகர் மக்கள் பீதியுடன் நேற்று முழுநாளும் பொழுதைக் கழித்ததுடன்பாதுகாப்பான இடங்களுக்கு நகரத் தொடங்கியதை அவதானிக்க முடிந்தது.

## முல்லைக்கடலில் உயிரிழந்தோர்

(வவுனியா)

முல்லைக் கடற்பரப்பில் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் மூன்று கடற் புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம்

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு அருகிலுள்ள தியவின்ன ஓயாவில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம் ஒன்று தோண்டி எடுக்கப்பட்டது.

இரத்தக் கறையுடன்

[4ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமிழ் அரசியல்கட்சிகளுடன்தேசியப் பிரச்சினையான இலங்கை இனப்பிரச்சினையின் இன்றைய நிலைபற்றி கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையே இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் பெறுபேறுகள் குறித்து தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி விளக்கிக் கூறினார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் தேவை

பாவித்த பீலித்தகரங்கள் 75 தேவை. உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் திருநெல்வேலி கிழக்கு.

(சி 383)

### தவறிவிட்டது

சின்னராசா தவபாலன் அவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 753252282 V விசேட அடையாள அட்டை இலக்கம் 091303256 தவறிவிட்டது ஒப்படைப்பவர்கட்கு சன்மானம் வழங்கப்படும். ந. சின்னராசா தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் விக்கினேஸ்வராவீதி

(532)

### விண்ணப்பம் கோரல்

சுகாதாரத்திணைக்களத்தில்கற்குநிலை மாணவ ஆண் பெண் தாதியர்களை பயிற்சியின் பொருட்டு ஆள் சேர்த்துக்கொள்வதற்கு திருமணமாகாத இலங்கைப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 30 வயதிற்குமிடைப்பட்டவராகவும் 4அடி 10அங்குலஉயரமுடையநல்ல தேகாரோக்கியமுடையவராகவும் மாவட்டத்தில் தொடர்ச்சியாக 3 வருடம் வசிப்பவருமாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் யூன் மாதம் 30 ம் திகதிக்குமுன்பு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான முழு விபரங்களும் 14-4-2000 திகதியில் வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. [120]

### ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ். சென் சார்ள்ஸ் மகா வித்தியாலயத்தின் அனைத்து ஆசிரியர்களையும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு மேற்படி பாடசாலை அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை கேட்டுள்ளார். (நட

### அறியத் தரவும்

பளையை இருப்பிடமாகக் கொண்ட சரசாலையில் வசித்த ஓய்வு பெற்ற ஆசிரியர் தாமோதரம்பிள்ளையையும் உறவினர்களையும்தேடுகின்றோம்.

தகவல்
திருமதி உ. ஜெகா
ராஜ்கடை
நெல்லியடி (கி-377)

### SHAMROCK
### A/L 2000 Com.

எமது ஆசிரியர் குழு கோண்டாவில் ஈசன் கல்வி நிலையத்திலும் கற்பிப்பதால் இடம் பெயர்வு காரணமாக விரும்பிய மாணவர்கள் அவ்விடம் அனுமதியைப் பெறலாம்.

நிர்வாகி
(537)

## தேடுகின்றோம்

கைதடி நுணாவிலைச் சேர்ந்த
நித்தியானந்தன ராணி, குயிந்தன் பிரதா
ஆகியோரை
தாயார் மங்கையர்க்கரசியும் அச்சக்கா
சறோஜினிதேவியும் தேடுகிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
சறோஜினிதேவி
''மிதிலை''
56/5 சம்பியன் லேன்,
கொக்குவில்.

(529)

## தேடுகின்றோம்

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த கதிர்காமநாதன் புனிதவதி பிள்ளைகளான கௌதமன், கௌதமி அவர்களின் விபரங்களை அறிவதற்கு அம்பாள் பார்மசி உரிமையாளர், வெண்புறாமினி வான் உரிமையாளர் பூந்துயில் அவர்களையும் அல்லது இவர்களின் நிலைபற்றி தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

''மடம்'' வ. துரைராஜன் (சைவம்)
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (சி 379)

## தேடுகின்றோம்

சாவகச்சேரி, சங்கத்தானை பசுபதியார் வீதி, யில் வசித்துவந்த திரு. நடராஜா, இராசேந்திரம் (அப்பன்) குடும்பத்தினரைப்பற்றிய விபரம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

குமார் & ரெட்னேஸ்வரி
C/o செந்தில்ச்செல்வன்
(இலங்கை மின்சார சபை)
பழைய வளவு வதிரி,
நெல்லியடி வடக்கு.

யாழ்ப்பாணம்.
Phone: 3440

(540)

## தவறிவிட்டது

மகேஸ்வரன் பிரதீஸ் என்பவரின் விசேட அடையாள அட்டை இல 0902031030 திருநெல்வேலிக்கும் மானிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி குமரன் பலசரக்கு மாளிகை, திருக்குமரன் களஞ்சியம், அல்லது மானிப்பாயில் உள்ள ஜீவன் தொலைத்தொடர்பு நிலையம் 2640ல் தொடர்பு கொண்டு ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்
ந மகேஸ்வரன்
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்

(523)

## இடமாற்ற அறிவித்தல்
## சி. இராமையாச்செட்டியார் அன் சன்

172, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
எமது ஸ்தாபனம் தற்பொழுது

NO 200, யாழ் வீதி மானிப்பாய்
(பிரதேச சபைக்கு முன்பாக)
இயங்குகிறது என்பதை அறியத்தருகின்றோம்)

முக்கிய குறிப்பு: வாடிக்கையாளர்களுக்கு 2000 ஆண்டு மேமாத முட்டைத்தின் எம்மிடம் உண்டு.
(கையிருப்பு உள்ளவரை)

(526)

## தகவல் தரவும்

உசனைச் சேர்ந்த
மு. சரவணமுத்துவின் மகள் தனலக்குமி
[ஆசிரியை], கணவன் யோகராசா பிள்ளைகள்
தற்போது தங்கியிருக்கும் இடத்தைத் தெரிந்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அறியத்தரவும்.

செல்வநாயகம் சுந்தரலிங்கம்
மே/பா ஸ்ரீரஞ்சன்
அஞ்சலலுவலகம்,
அளவெட்டி.

(524)

## தகவல் தரவும்

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த
சதாசிவம் உருத்திரமூர்த்தி
(ஆசிரியர் யா/ உசன் இராமநாதன் ம. வி)
மனைவி சிவநங்கை
(ஆசிரியை யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி)
ஆகியோரைப் பெற்றோர்கள் தேடுகின்றார்கள். இவர்களின் விபரத்தை அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தயவு செய்து உடன் தகவல் தரவும்.

ம. கதிர்காமத்தம்பி
C/o சிவலோகநாதன்
3ம் கட்டை பலலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

(535)

## தகவல் தரவும்

சாவகச்சேரி A. G. A. கந்தோரில் கடமைபுரியும்

திருமதி குமாரசூரியர் சாந்தமலர் (சாந்தி)

குடும்பத்தினர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்
மு. தனபாலசிங்கம்
4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(530)

## முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளை ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் 01-06-2000 திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய காரியாலயத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(இ-376)

## அவசர கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட இறுதிவருட A, B பிரிவு மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 01-06-2000 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்,

தலைவர்.
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட
மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி 380)

## தொடர்பு கொள்ளவும்

மேர்கன்ரைல் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தைச் சேர்ந்த

திரு. அம்பலவாணர்
திரு A. S சர்மா

ஆகிய இருவரும் எங்கிருந்தாலும் வர்த்தக வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்
வர்த்தக வங்கி
யாழ்ப்பாணம்

(538)

## தகவல் தரவும்

யா/யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு, ந. சடாதரன் அவர்கள் தற்போது எங்கு உள்ளார் என்பதனை அறிய ஆவலாக உள்ளோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி-382)

## அவசர பொதுக் கூட்டம்

கலைப்பீட மாணவர்களுக்கான அவசர பொதுக் கூட்டம் 31-05-2000ந் திகதி (புதன் கிழமை) காலை 10-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

தலைவர்
கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக் கழகம். (சி 381)

ஈன்றாள் பசிகாண்பா-
ளாயினும் செய்யற்க-
சான்றோர் பழிக்கும்-
வினை.

- குறள்

# வலம்புரி

## ஓ! தமிழ்ச் சமுதாயமே

கொடுப்பாருமில்லை, கொள்வாருமில்லை கோசல நாட்டில் என்று பிரமித்துப்போனான் கம்பன் அன்று. எங்கள் தமிழ்ச் சமூகத்தை நினைத்தால் நெஞ்சம் கனலாகிறது. இடம்பெயர்ந்தநிலையில் உயிரைக்காக்க வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடுகிற நிலையில் பொருள் சம்பாதிக்க ஒரு திருட்டுக் கூட்டம் அலைகிறதே. வெட்கமென்னவென்றால் மலகூடத் தூரிகையும், மண்சட்டிகளும், எஞ்சில் கோப்பைகளும் கூட அந்த விற்பன்னர்களுக்கு விநோதப்பொருள்கள், வேண்டும் பொருள்கள். எங்கள் மண்ணை வீணா கானபுரம் என்று தான் கூறக்கேட்டிருக்கின்றோம் விந்தனை என்றுவிளம்பக் கேட்டதில்லையே.

நாடு சுதந்திரம் பெற வேண்டும் தான். அதற்கு முன் சமூக விடுதலை முன்பே வேண்டும். புல்லுருவிகள் பூண்டோடு அழிக்கப்படவேண்டும். இந்தச் சிந்தையில்லா சிறுநரிக் கூட்டத்தை அந்த மான் தீவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். வீட்டில், சமூகத்தில் விடுதலை மலர்ந்தால் மட்டுமே அன்பு மலிந்தஎங்கள் மண்ணில் உண்மையான நிம்மதி மலரும்.

சோம்பிப் படுத்துறங்கி, கசிப்புக்களை அருந்தி குடும்பம் குலைய, குரைக்கும் நாய் வாழ்வை - இல்லை- சொறி நாய்போல் வாழ்ந்த வாழும் கூட்டம் வழித்து அழித்தெடுக்க வேண்டும். எங்கள் மண்ணின் சாபக்கேட்டை துடைத்தாகவேண்டும். அன்று தான் மனித நேய மக்கள் மலிந்த கோசல நாடு போல் எம் மண் மலரும். அந்த மலர்விலே தான் புனிதமான வாழ்வு புலரும்.

ஒன்றாக வாழ்ந்து, ஒரே காற்றைச் சுவாசித்து நிலமகளின் மடியில் தவழ்ந்த இவர்கள் புத்தி பேதலிப்பது ஏன்? பேதைகளாவது ஏன், மனிதம் மலராத குரங்குப் புத்தி குறுக்கிடுவது ஏன்? குறுக்குவழியில் சம்பாதித்தாலும் குடிசை வாழ்வும், கௌவ்வைக் குதவா குடிவாழ்க்கையும் இவர்களை விட்டபாடில்லையே. இலக்கற்ற ஈனர்கள் சமூகவிரோதிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே,

பொறுமைக்கு இலக்கணம் நிலமென்றான் வள்ளுவன். அந்த மண் மாதாவே இந்த மா நீசர்களைத் தாங்கிக் கொள்ள மாட்டாள்.

- அன்புடன் ஆசிரியர்

## போரினால் காணாமற் போனோரின் தகவல் சேகரிக்கும் நிலையம் வவுனியாவில் திறந்துவைப்பு

நாட்டின் யுத்தத்தினால் காணாமற்போனோரின் தகவல்களைச் சேகரிக்கும் நிலையம் ஒன்று வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் தலைவர் ஜி.பி. நாணயக்கார பேசுகையில் போரினால் இரு இனங்களின் இளைஞர்கள் அழிந்துபோகிறார்கள், போர் வேண்டாம், அரசியல் தீர்வின் மூலம் தீர்வொன்றைக்காண வேண்டும்'' என்றுகூறினார். இவ்வமைப்பிடம் இதுவரை 1800 காணாமற் போன படையினரின் விபரங்களும்' 380தமிழர்களது விபரங்களும் கொடுக்கப் பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-04)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் நாளை 31ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கான நேர்முகப்பரீட்சைக்கு பின்வருவோரை சமுகம் கொடுக்குமாறு மேற்படி கல்வியியற் கல்லூரி அதிபர் தி.கமலநாதன்தெரிவித்துள்ளார்.

சண்முகராசா -பாலரூபன் புதியநிசுணடு வீதி, ஆனைக்கோட்டை. கனகசபை-கிருஷ்ணகுமார்-அரியாலைமேற்கு. செல்வராசா-நடேசு-கோண்டாவில் கிழக்கு. சித்திரா-வைரமுத்து -வண்ணார்பண்ணை. துரைராசா-ஸ்ராலின், கொழும்புத்துறை. ஆறுமுகம் -இரத்தினம் - கோப்பாய் வடக்கு. மார்க்கண்டு - யசிந்தன்-நீர்வேலி தெற்கு. கோவிந்தபிள்ளை - யோகராசா-பிரம்பபடிஒழுங்கை, கொக்குவில். உமாசிவதர்ஷினி-நவரெத்தினம், புலோலி வடக்கு-சிவலிங்கம் -விஜயரூபன். திருநெல்வேலி. துரைராசா, இராசலெட்சுமி - கோப்பாய் தெற்கு. ஜாகப்புயோக்-ஜெயசீலன் - பெரியவிளான் இளவாலைதம்பித்துரை - ஜெயசீலன் - கோப்பாய் தெற்கு. சண்முகநாதன் துஸ்யந்தன் அத்தியடி. யாழ்ப்பாணம். (க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையிலும் மற்றும் பல சம்பவங்களிலும் உயிரிழந்த தமது உறுப்பினர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரங்கள் வருமாறு;-

★ செந்தூரன்
(முத்துக்குமாரு - ஜெயப்பிரபாலதன்)
திருகோணமலை;

★ மூர்த்தி
(திராதிரன்-சுமன்)
திருகோணமலை.

★ விஜிதரன்
(வேலாப்பொடி - திருக்குமார்)
மட்டக்களப்பு

★ நேசவேந்தன்
(தம்பிராசா - செங்காதரன்)
அம்பாறை.

★ வாசுதரன்
(முத்தையா - முருகன்)
அம்பாறை.

★ சிந்து
(பொன்னையா-யோகன்)
கண்டி.

★ சகாப்தன்
(தர்மலிங்கம்-கணேசமூர்த்தி
மட்டக்களப்பு.

★ அலையரசி
(துரைசிங்கம்-கிரிதா)
யாழ்ப்பாணம்.

★ ஆர்த்தி
(ஜெயக்குமார்-யோகேஸ்வரி)
யாழ்ப்பாணம்;

★ இன்மொழி
(செல்வராசா-விக்கினேஸ்வரி)
முல்லைத்தீவு.

★ மாந்திரன்
(சீனித்தம்பி வரதராசா)
மட்டக்களப்பு, சிறப்பு எல்லைப்படையைச் சேர்ந்த
யோகபாலன் தவக்குமார்
யாழ்ப்பாணம்

★ தமிழமுதன்
(இராசதுரை சுரேஸ்)
திருகோணமலை
ஆதரவாளரான

★ கலாமோகன் சுகந்தன்
யாப்ழ்பாணம்
எல்லைப்படையைச் சேர்ந்த

● இளங்கீரன்
[சிவலிங்கம் செல்வகுமார்
யாழ்ப்பாணம்]



## தகவல் தரவும்

மீசாலை கிழக்கு சியாமளாமில் ஒழுங்கையில் வசித்த சுரேந்திரன் (சிறி) குடும்பத்தினர் இருக்குமிடம் அறியத்தரவும்.

திரு. கிருஷ்ணபாலா
333கோவில் வீதி
நல்லூர்

(535)

## அறிவித்தல்

# கொனிகா கலர் லாப்

100A, ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த எமது ஸ்தாபனத்தில் பிரதியாக்கத்துக்கு கொடுக்கப்பட்ட படச்சுருள்களை உடன் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:-
எங்களிடம் ஒப்படைக்கப்படும் படச்சுருள்களை குறுகிய நேரத்தில் பிரதியாக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

KONICA COLOUR LAB
14, ஸ்ரீ வெங்கடேசன்வீதி
[பெருமாள் கோவில் அருகில்]
யாழ்ப்பாணம்.

[539]

## தேடுகின்றோம்

எழுதுமட்டுவாள் சிவன்கோவிலடியைச் சேர்ந்த
1) முருகேசு நாகரத்தினம்
2) முருகேசு மாலினி (மாலா)
ரவிகளஞ்சியம் சாவகச்சேரி உரிமையாளரான
பத்மநாதன் ரவிச்சந்திரன் குடும்பம்
(சாவகச்சேரி சங்கத்தானை)
ஆகியோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

செ. இரத்தினராசா
கேணியடி
கொக்குவில் மேற்கு கொக்குவில்

[527]

## விற்பனை நிலைய இடமாற்றம்

# கௌரி அழகு மாடம்

(அழகு சாதனப் பொருள் மொத்தவிற்பனையாளர்)
316 கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது விற்பனை நிலையம் தற்போது

# கௌரி அழகு மாடம்

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(மூத்த நயினார் கோவில் அருகாமையில்)
இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்

உரிமையாளர்
கௌரி அழகு மாடம்

(509)

## தகவல் தரவும்

கைதடி நுணாவில் வைரவர் கோவிலடியைச் சேர்ந்த திருமதி. த.கமலநாதன் மட்டுவில் தெற்கு வாகையடியைச் சேர்ந்த திரு.கா.விஜயசுந்தரம் குடும்பம் சங்கத்தானையைச்சேர்ந்த திருமதி.க.லோகசுந்தரம் ஆகியவர்கள் அல்லது அவர்களைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் பின்வரும் ஏதாவது ஓர் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

கா.உருத்திரசுந்தரம்
வடபிராந்திய போக்குவரத்துச்சபை
கோண்டாவில்

உருத்திரசுந்தரம்
193/3Brown Road Jaffna.

(536)

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

ஏழாலை வடக்கு கிழக்கு சனசமூக நிலைய அபிவிருத்தி நிதிக்கான அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

1ம் பரிசு இல. 1372
2ம் பரிசு இல. 0127
3ம் பரிசு இல. 2486

ஆறுதல் பரிசு விபரம்

| | | | |
|---|---|---|---|
| i) | 214 | vi) | 2440 |
| ii) | 2060 | vii) | 1937 |
| iii) | 1944 | viii) | 685 |
| iv) | 1211 | ix) | 2432 |
| v) | 1259 | x) | 2031 |

குறிப்பு: நாட்டு நிலைமை காரணமாக பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் 15-06-2Kக்கு முன்னர் பரிசுகளை சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

ச. முருகவேள்
சனசமூக நிலையம், ஏழாலை வடக்கு

(525)

## யாழ் கல்வி நிலையம்

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

# O/L DAY CLASS

ஆரம்பம்: 31-05-2000 புதன்
காலை 8-30

| | |
|---|---|
| கணிதம் | - Mr C.K.B. தயாளன் |
| விஞ்ஞானம் | - Mr டார்வின் |
| ஆங்கிலம் | - Mr பத்மராஜா |
| தமிழ் | - Mr தயாபரன் |
| சமயம் | - Mr N.T. தரன் |
| சமூகக்கல்வி | - Mr ஐங்கரன் |
| வரலாறு | - பிரபல ஆசிரியர் |
| வர்த்தகம் | - Mr சுபநாதன் |
| சித்திரம் | - Mr தயாபரன் |

பிரிவு I மட்டுமே. அனுமதியை உடன் உறுதிப் படுத்திக் கொள்ளவும்.

புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை
(BOND கல்வி நிலைய வினாத்தாள்கள்)
ஒவ்வொரு ஞாயிறும் காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு: வினாத்தாள் தேவைப்படுவோர் முன் கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி

[531]

## தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்து

# வடமராட்சியில் 14 முகாம்களிலும் வீடுகளிலும் தங்கியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி வந்துள்ள மக்களின் நலன்கருதி 14 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கரவெட்டியில் 11 முகாம்களும் பருத்தித்துறையில் 3 முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. இம் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளை பிரதேச செயலகங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், பொதுநிறுவனங்கள் தொண்டர் சபைகள் என்பன செய்து வருகின்றன. சிறுவர்களுக்கான அனைத்து உதவிகளையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம்செய்துவருகின்றது.

இதேவேளை வடமராட்சியிலுள்ள முகாம்களில் தங்கி உடைோரைவிட உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் சுமார் 1000 குடும்பங்கள் தங்கியிருப்பதாகவும், தெரிவிக்கப்படுகிறது. (வ 77)

முல்லை....

★ சர்வேஸ்
(இனோமிநாதன் எட்வேட் செல்வராஜன்) யாழ்ப்பாணம்.

★ ஜெயதாரணி
(முத்துத்தம்பி லோகேஸ்வரி) யாழ்ப்பாணம்.

★ நிறஞ்சகுமார்
(தனபாலசிங்கம் சுரேஸ்) யாழ்ப்பாணம். (வ-ச)

# யாழ். சிறைச்சாலையை மூடுமாறு தலைமையகம் அவசர உத்தரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையை மூடிவிடுமாறு சிறைச்சாலை தலைமையகம் உத்தரவிட்டுள்ளதாசத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். சிறைச்சாலையில் அறுபத்தொன்பது கைதிகள் உளளதாகவும் அவர்களில் 38பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கிழ் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் ஏனையோரில் பத்து இந்திய மீனவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கைதிகளை கப்பல்மூலம் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கும் படியும் சிறைச்சலைத் தலைமையகம் அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (வ-ச)

அமெரிக்க...

தனித்தனியே சந்தித்துப் பேசியுள்ளார்.

இப் பேச்சுக்களின் போது அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவரும் கலந்துகொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடனான சந்திப்பின் போது யாழ்ப்பாணம் மோதல் சம்பவங்கள் தொடர்பாகவும் இலங்கை அரசு எடுகக வேணடிய நடவடிக்கைகள் குறித்தும், அமெரிக்கா எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கை தொடர்பாகவும ரணில அமைச்சருக்கு விளக்கிக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பை அடுத்து நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டமைச்சின் செயலர் லயனல் குணதிலக, ஜனாதிபதியின் செயலர் பாலபட்ட பெண்டி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது தற்போது யாழ்ப் பாணத்தில் நடைபெறும்யுத்தத்தைநிறுத்தும் வழிகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

தென்மராட்சியில்...

சாவகச்சேரி. மரியம்மா (வயது 31), சாவகச்சேரி. இராசம்மா (வயது 72) சாவகச்சேரி, பொன்னன் (வயது 42) மட்டுவில் தெற்கு மட்டுவில்) சந்திரவிமலா (வயது52) மட்டுவில் தெற்கு மட்டுவில், செ. தயாளினி (வயது 25), மட்டுவில் தெற்கு மட்டுவில், வையந்திமாலா (வயது 15), மட்டுவில் தெற்கு மட்டுவில், வே. இராமநாதன் (வயது 45), மறவன்புலோ நா. தங்கராசா (வயது 50), நுணாவில் மேற்கு, ந. விமலகாந்தன் (வயது 19) மட்டுவில் தெற்கு, ந. சிவபாலன் (வயது 63), நுணாவில் மேற்கு. (ச-7)

இலங்கை....

திடப் ஐ.கே,குஜ்ரால்கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணும் போது சிறுபான்மைத் தமிழர்களின் ஆசைகள் நிறைவேறும் என்றும், தனி மாநிலம் என்ற கொள்கையை இந்தியா ஆதரிக்க முடியாது என்றும் இலங்கையில் ஒற்றுமையும், இறைமையும் பேணிக்காக்கவேண்டிய விடயத்தில் தாமும் மத்திய அரசும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். (வ)

தமிழ் கட்சி...

துள்ளார்.

இக்கலந்துரையாடலில் தமிழர் விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த இராசம்பந்தன், ஜோசப் பரராசசிங்கம், ஈ.பி-டி.பி சார்பில்டக்ளஸ் தேவானந்தா புளொட் சார்பில் த. சித்தார்த்தன் ஆகியோரிடம் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். [வ

# கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது மா பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டு வருவதாக கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மூன்று தினங்களாக காங்கேசன்துறை உணவுக்களஞ்சியத்தில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்து வந்ததை அடுத்தே சங்கங்கள் தற்போது மா விநியோகத்தை மேறகொண்டுளளன. (வ)

# நிவாரணம் வழங்கஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இடமபெயர்ந்தவர்களுக்கான யூன் மாதத்திற்குரிய 80 ஏ. பி. முத்திரைகளுக்கான நிவாரணப பொருட்களை புனர்வாழ்வுப் பகுதியினர் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றனர்,

நிவாரணத்துக்குரிய பொருட்களான அரிசி, சீனி, பால்மா ஆகியவற்றை நேற்று மட்டும் ஒன்பது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுளளதாக புனர்வாழ்வுப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

ஒன்றுபட்ட...

ளார்.

நேற்றுக்காலை கொழும்பு வந்து சேர்ந்த அமெரிக்க இராஜாங்கஇணை அமைச்சர் தோமஸ் பிக்கட்றின்ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா,இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், தமிழ்கட்சிகளின் தலைவர்கள். ஆகியோரைச் சந்தித்தபோது மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்தார். வ]

கால்கள்...

தோண்டி எடுக்கப்பட்ட இச் சடலம் வெலிக்கடைப பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சார்ஜன் ஒருவருடையது என்று அடையாளம் காணப்பட்டுளளது.

இவரது கொலை தொடர்பாக வெலிக்கடைப் பொலிஸ் நிலைய அதிகாரி ராஜபக்ஷ தலைமையில் விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரிய வருகிறது [வ-7]

இன்று...

வுள்ள கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார்.

இக் கலந்துரையாடலில் தற்போதைய சூழ்நிலையில் உணவு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்குவதுதொடர்பாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

### கண்டெடுக்கப்பட்டது

சிற்றம்பலம் சபாரத்தினம் குடத்தனை வடககு, மருதங்கேணி, மாணிக்கம் தர்மராஜா (சின்னத்தம்பி) சண்டிலிப்பாய், பாலசிங்கம விககினேஸ்வரன் அரியாலை, இராஜரெட்ணம் பாலச்சந்திரன் குருநகர், ஆர். வசந்தகுமார் சென். மேரிஸ் வித்தியாலயம் ஆகியோரின அடையாளஅட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிஅலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுளளது. உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளவும். ந

தமிழ்...

இப்பேச்சு வார்த்தையில் புளொட், ஈ.பி.டி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை நேற்று இரவு ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே அலரி மாளிகையில பேச்சு வார்த்தை நடைபெற்றது இச்செய்தி எழுதும் வரை பேச்சு வார்த்தை விபரம் வெளியிடப்படவில்லை. (வ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரிகுகடாசன்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் இருபாலை, வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி புவனேஸ்வரி குகடாசன் 19-05-2000 வெள்ளிக்கிழமை இரவு வவுனியாவில் காலமானார். அன்னார் குகடாசனின் (முன்னாள் C.W.E.) அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சண்முகம் சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் நரசிங்கம் சிவகாம்பிகை தம்பதிகளின் மருமகளும் மற்றும் மீரா (A.O. அவுஸ்திரேலியா) தபோதினி ஆசிரியை (Convent) வவுனியா, நகுலேஸ்வராமகாவித்தியாலயம் கீரிமலை ஆகியோரின்பாசமிகுதாயாரும்விஜயகுமார் Accountant அவுஸ்திரேலியா) முகுந்தன் (ஆசிரியர் வவுனியா) ஆகியோரின் மாமியாரும் யாழினி, யோகினி (அவுஸ்திரேலியா) சோபிகா, சோபிதா (வவுனியா) ஆகியோரின் பேத்தியாரும் இளைப்பாறியவர்களான சிவதாசன் (உபதபாலதிபர்) குகதாசன் (C.W.E) தர்மதாசன் (ஆசிரியர்) ஜெயதாசன் D. I. R ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.05.2000 சனிக்கிழமை அவரது இல்லத்தில் 167, ஸ்டேசன்றோட் வவுனியாவில் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது. என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்
முளாய் —சிவதாசன்
உடுப்பிட்டி —குகதாசன்
கந்தரோடை—தர்மதாசன்
சுழிபுரம் (இருபாலை)—ஜெயதாசன்

(522)

### திருமதி தனபாலசிங்கம் தனலட்சுமி (தனபாக்கியம்)

(முன்னாள் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியையும் தற்பொழுது நு/டிக்கோயா தறவளை தமிழ் வித்தியாலய ஆசிரியை)

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது டிக்கோயாவைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் தனலட்சுமி 28-05-2000 அன்று ஞாயிற்றுக்கிழமை டிக்கோயாவில்காலமானார்.

அன்னார். தனபாலசிங்கம் (சுவிஸ்) முன்னாள் ஆசிரியர் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சத்தியேந்திரா (மருத்துவபீடமாணவன்) பாலேந்திரா (சுவிஸ்) தனஜா (டிக்கோயா) தனேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜித்தா (சுவிஸ்) ரட்னதீபன் (வர்த்தக வங்கிசேஷியர் வீதி, கொழும்பு) சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின அன்புமாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை டிக்கோயாவில் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்
திருமதி M.P.R. கனகரட்ணம்
(யாழ்.இந்து ஆரம்பபாடசாலை)
திருமதிஇ.சண்முகநாதன்
(நு/காசிப்பிள்ளைவித்தியாலயம்)

56 ஒட்டுமடம் வீதி
யாழ்ப்பாணம்

(534)

## மரண அறிவித்தல்

### அருட்தந்தை மைக்கல் சவரிமுத்து அடிகளார்

அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்தந்தை மைக்கல் சவரிமுத்து அடிகளார் (29-05-2000) நேற்று திங்கட்கிழமை கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர்குளமங்காள்புனிதசவேரியார்பங்கைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் அருட்செல்வி பிரான்சிஸ்காவின் சகோதரனும் அருட்தந்தை பிரான்சிஸ் ஜே சப் அடிகளாரின் மாமனாரும் ஆவார். அடிகளார் நீண்டகாலமாக கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னாள் பங்குத் தளத்தில் பணியாற்றியுள்ளார்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் முகமாலை புனித திரேசாள் புரத்தைத் தனது பணிக்களமாகக் கொண்டு ஏழைகளுக்குப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு இரந்து நிற்கின்றோம்.

தகவல்

தொடர்பகம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மாகாணத்தலைவர்
அமலமரித்தியாகிகள்
(கி-384)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.